ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்றது

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022

முதுகலைத் தமிழ்த்துறை

சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

**சிறப்பிதழ் ஆசிரியர்**

Special Issues Editor

முனைவர் தே.ராஜசீலி

**சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்**

Special Co - Editors

முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்,

துறைத்தலைவர்

முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,

முனைவர் சௌ.ஜான்சிராணி,

திருமதி லூ.சவரியம்மாள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

113. சித்த மருத்துவம் இயற்கை மருத்துவத்தின் கருவூலம் 589
முனைவர் அரங்க.சீனிவாசன்

114. பண்டைத்தமிழ் இலக்கியத்தில் கலையும் சூழலும் 596
முனைவர் ரெ.சுசிதாராணி

115. மருதநிலமும் மகட்பாற் காஞ்சியும் 599
மு.அரவிந்

116. ஆண்டாள் பாசுரங்களில் இயற்கை எழில் 604
நா.கிருஷ்ணவேணி & முனைவர் கோ.இராஜேஸ்வரி

117. வள்ளுவம் சுட்டும் இயற்கை வேளாண்மை 608
மு.பாண்டிமீனா

118. கலித்தொகையில் இயற்கை வளம் 613
வே.ரத்னா & முனைவர் மு.கவிதா

119. சம்புவராயர்களின் ஆட்சியில் தொண்டை மண்டலத்தின் இயற்கை அரண்கள் 618
திருமதி ம.வித்யாமதி & முனைவர் ஆ.திருமேனி

120. மேலாண்மை பொன்னுசாமி சிறுகதைகளில் இயற்கை 622
கோ.இராஜாங்கம் & முனைவர் இரா.சதாசிவம்

121. குறுந்தொகைப் பாடல்களில் இயற்கை 626
த.திலகவதி & முனைவர் மு.கவிதா

122. தமிழ் இலக்கியங்களில் இயற்கை [ஒரு பருந்துப் பார்வை] 631
திரு.தே.சண்முகம் & முனைவர் ஆ.அருள்தாசு

123. கவியின்பமும் காட்சியின்பமும் 636
முனைவர் செ.தேன்மொழி

124. முல்லைத்திணை இயற்கையும் மாந்தர் உணர்வும் 641
மோ.செல்வதாஸ்

125. சித்திரக்கவிகளில் இயற்கை 644
கு.திலகவதி & முனைவர் இரா.சுப்பிரமணி

126. வெ.இறையன்பு படைப்புகளில் பறவைகள் 650
பா.விக்னேஷ் குமார்

127. ஔவையார்பாடியசங்க இலக்கியப் பாடல்களில் இயற்கைப்புனைவு 653
முனைவர் வீ.கவிதா

128. பன்னாட்டுத் தமிழ்க் கவிதையில் இயற்கையும் சமகாலத்துவப் பொருத்தப்பாடு 657
தெ.வெற்றிச்செல்வன்

129. வீரயுகநாயகன் வேள்பாரி புதினத்தில் இயற்கை 663
கு.அனிதா & முனைவர் விமலா

130. திருமறையில் இயற்கை - ஒரு சிறப்புப் பார்வை 667
திருமதி து.வீனாதெபோராள் & முனைவர் மா.இரவி

131. சங்ககாலத் தொழில்களில் இயற்கை 672
கு.ஜெயலட்சுமி & முனைவர் சு.விஜயாகலைவாணி

132. ஐம்பேரியற்கை புதினத்தில் இயற்கைக் கோட்பாடு 676
ம.பிரகாஷ்

# 126. வெ.இறையன்பு படைப்புகளில் பறவைகள்

பா.விக்னேஷ் குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதர்களின் செயல்பாடுகள் இன்றி இயல்பாகத் தோன்றுவது இயற்கை எனப்படும். சங்ககால முதல் நம்முடைய முன்னோர்கள் இயற்கையோடு இயந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஒரு நூறு மனிதன் சொல்ல இயலாத கருத்துக்களை ஒரு நிமிடத்தில் இயற்கை மனிதனுக்கு புகட்டுகிறது. அவ்வகையில் தற்காலத்தில் ஆக்கச் சிந்தனையுடன் தனது படைப்புக்களை வெளிப்படுத்தி வருபவர் வெ.இறையன்பு அவர்கள் அவர் தன்னுடைய படைப்புகளில் பறவைகளின் செயல்பாடுகள் வாயிலாக மனிதன் கடைபிடிக்க வேண்டிய கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனிதனின் செயல்பாடுகள் இன்றி இயல்பாகதோன்றும் பொருட்களை இயற்கை என்கிறோம். அதில் அப்பொருள்களின் இயக்கம், வாழும் இடம், வாழும் காலம் ஆகியவை அனைத்தும் அடங்கும். அத்தகைய இயற்கையோடு இயந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் நம்முடைய முன்னோர்கள். தொழில்நுட்பயுகம் என்று சொல்லும் தற்காலத்தில் தொழில்நுட்பத்துடன் வாழும் மனிதர்களுக்கும், இயற்கையோடு இயற்கையாக வாழும் மனிதர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உடையவர்களாக காணப்படுகிறார்கள். இயற்கை மனிதனுக்கு எவ்வாறு வாழவேண்டும் என்று கற்றுத் தருகிறது. தற்காலத்தில் ஆக்கச் சிந்தனையுடன் தனது படைப்பினை வெளிப்படுத்தி வருபவர் வெ.இறையன்பு அவர்கள் அவர் தன்னுடைய படைப்புகளில் பறவையின் வாயிலாக வீரம், பொதுநலம், தாய்மை, கூடி வாழும் குணம், நன்மைதரும் செயல் ஆகியவற்றை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**வீரம்**

ஒவ்வொரு தாயும் தன்னுடைய குழந்தை வீரம் உடையவனாகவும், நேர்மை உடையவனாகவும், நற்குணங்களையுடையவனாகவும் வாழவேண்டும் என்று விரும்புகிறார்கள். எந்த ஒரு தாயும் தன் குழந்தை வீரம் இல்லாதவனாக வாழ்வதை விரும்புவதில்லை. பெற்றோர் தங்கள் குழந்தைகள் வீரம் உடையவனாகவே வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்பதை இறையன்பு.

“அயற்கோழியிடம் போய்
கொத்துவாங்கி
வந்திருக்கிறதே
ஏமாளியாய்த் தன் குஞ்சு
என்ற
கோபத்தில்
தாய்க்கோழி
கடிந்து
கொத்தியது
குஞ்சை....” (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல்,ப.9)

என்கிறார். தாய் கோழிதன் குஞ்சை கொத்துகிறது. அதனை இறையன்பு வீரத்திற்கு ஒப்பிட்டு சொல்கிறார். நம்முடைய முன்னோர்களும் தன் குழந்தை வீரம் உடையவனாகவே வாழவேண்டும் என்று கருக்கிறார்கள். அதனையே பெருமையாகக் கருதினர். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் வீரம் உடையவனாக வாழவேண்டும்.

**பொதுநலம்**

நம்முடைய முன்னோர்கள் பிற உயிரினங்களைப் பற்றிபாடி இருக்கிறார்கள். பெரும்பாலும் மயில் குயில் போன்ற பறவைகளைப் பற்றி பாடியிருக்கிறார்கள். ஆனால் காகத்தைப் அத்தகைய அளவு பாடவில்லை என்பதை,

"காகமே
மயிலையும் குயிலையும்
மணிக்கணக்காய்
எத்தனையோபுலவர்கள் பாட
அதிகமாய் யாரும் பாடாத
உன்னைநான் பாடுகிறேன்" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல்,ப.14)

என்கிறார். மக்கள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று பாராது. அனைவரையும் ஒன்றாக கருத வேண்டும் என்பது வெளிப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கு மட்டும் உணவு கிடைத்தால் போதும் என்று கருதாது. உலகில் உள்ள அனைவருக்கும் உணவினைக் கொடுத்து அனைவரும் பகிர்ந்து உணவு உண்ணவேண்டும்; என்பதை காகம் மனிதனுக்கு கற்றுத் தருகிறது. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் காகத்தைடின்று பொதுநலம் உடையவர்களாக வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதே எல்லார்க்கும் எல்லாம் கிடைப்பதற்கான வழி.

## தாய்மை

மனிதர்கள் மட்டுமில்லாது பிற உயிர்களிடத்திலும் தாய்மை என்னும் உணர்வு காணப்படுகிறது. ஒருதாய் தன் குழந்தைகளிடம் எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும் என்பதை தேசிக விநாயகம் பிள்ளை பிம்பிசாரா மன்னன் அரண்மனைக்கு ஆடுகள் கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாடுகள் கொண்டு செல்லும் போது அதனை புத்தர் காண்கிறார். அப்போது அதில் தாய் ஆடு தன் குட்டியை தேடிமுன் செல்கிறது. மற்றொரு குட்டிவலியால் பின் துடிக்கிறது. தாய் ஆடு முன் செல்வதாபின் செல்வதா என்று தயங்குகிறது. அதனை,

"ஓடும் மறித்தேடித் தாய் தன்னில்
ஓரடிவைத்தவுடன்
வாடும் மரியைஎண்ணி
விரைந்துவந்துதயங்குதையோ" (ஆசியஜோதி,ப.55)

என்கிறார். ஒருதாய் தனக்குப் பிறந்த குழந்தைகளிடம் வேறுபாடுகள் இல்லாமல், நடுநிலைமையுடன் அனைவருக்கும் அன்பினை செலுத்த வேண்டும் என்பது வெளிப்படுகிறது. பறவைகள் தன்னுடைய குஞ்சானது தானே பறந்து சென்று உணவினை உண்ணும் வரை, உணவினை எடுத்து வந்து கொடுத்து தன்னுடைய குஞ்சுகளை பராமரிக்கிறது. அதனைப் வெ.இறையன்பு, "ஒருதாய்க் குருவிதன் குஞ்சுகளுக்குத் தன்னுடைய சிறகுகளுக்கடியில் கதகதப்பை வழங்கிக் கொண்டிருந்தது அதுதான் தாய்மையோ" (அழகோஅழகு,ப.62) என்கிறார். அதனைப் போல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நட்பு நலன்கள் உடையவர்களாக பராமரிக்க வேண்டும் என்பது வெளிப்படுகிறது. ஒவ்வொரு தாய்மார்களும் தங்கள் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டும் என்றே எண்ணுகிறார்கள். அவ்வாறு நினைக்கும் தாய்மார்கள் தங்களின் பிள்ளைகளை பிறர் பாராட்டும் போது மகிழ்ச்சியடைகிறார்கள். அல்லதுதன் குழந்தையை பிறர் சான்றோர் எனச் சொல்வதை கேட்கும் போது மகிழ்ச்சியடைவார் என்பதை வள்ளுவர்,

"ஈன்றபொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்" (குறள்,69)

என்கிறார் வள்ளுவர். தன் மகனைக் கண்டு மகிழ்ச்சியடையும் தாய் பிறகு ழுந்தைகளையும் தன் குழந்தையாக கருத வேண்டும் என்பதை வெ.இறையன்பு குறும்புக்காரக் குயில்களுக்கு,

"நீதானே
அடைகாக்கும்
ஆதாரவானசெவிலித்தாய்" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல்,ப.15)

என்கிறார். தாய்மார்கள் பிறகு ழுந்தைகளையும், தன் குழந்தையாக கருந்த வேண்டும் என்பதை காகம் தன் குஞ்சிற்கு மட்டும் அல்லாது குயில்களுக்கும் அடைக்கலம் தந்து காப்பாற்றுகிறது. அதனைப் போல தாய்மார்களும் பிற குழந்தைகளை தன் குழந்தைகளாக பாவிக்க வேண்டும் என்கிறார்.

## கூடி வாழும் குணம்

ஒவ்வொரு மனிதனும் தனி ஒரு மனிதனாக வாழமுடியாது. ஒவ்வொரு மனிதனும் கடவுளின் படைப்பிலையே பிற மனிதனை சார்ந்து வாழும் தன்மை உடையவனாகவே படைக்கப்படுகிறான். அவ்வாறு படைக்கப்படும் மனிதன் கூடி வாழ்வது கிடையாது. அவ்வாறு கூடி வாழும் தன்மை இல்லாமையின் காரணமாகத்தான் பல்வேறு குற்றங்கள் நிகழ்கிறது. அத்தகைய குற்றங்கள் களையப்பட வேண்டும் எனில் மக்களுக்கு, கூடி வாழும் தன்மை வேண்டும் என்பதை,

"கூடி வாழும் குணத்தைமனிதனுக்கு
போதிக்கஎத்தனைமுறைமுயன்றும்
நீஏமாந்தேபோனாய்" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல், ப.16)

என்கிறார். காகம் மனிதனுக்கு ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை கற்றுத் தருகிறது. ஆனால் மனிதன் கூடி வாழும் குணத்தை கடைபிடிக்க தவறுகிறான். மனிதன் கூடி வாழும் குணத்தை கடைப்பிடிப்பதே சமுதாயம் மேன்மை அடைவதற்கான வழி.

## நன்மைதரும் செயல்

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இத்தேவைகள் பூர்த்தியடைந்த சமுதாயத்தில் எந்த ஒரு சண்டைகளும் ஏற்படுவதில்லை. அச்சமுதயத்தில் மக்கள் ஒற்றுமையாகவே வாழ்கிறார்கள், ஆனால் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடையாத சமுதாயத்தில் வாழும் மக்களிடம் சண்டைகள் ஏற்பட்டு வண்ணம் உள்ளது. மக்கள் தங்கள் இனத்துக்குள் சண்டையிடுதல் கூடாது என்பதை வெ.இறையன்பு,

"இனத்துக்குள் சண்டையிடும்
இழிந்தபழக்கம் இல்லாத
இனியபறவையே" (பூபாளத்திற்கொருபுல்லாங்குழல் பல, 16)

மக்கள் ஒருவரைஒருவர் தாங்களே சண்டையிடுதல் என்பது இழிந்த பழக்கமாகும். மக்கள் தங்களுக்குள் தாங்களே சண்டையிடாது காகத்தை போன்று ஒற்றுமையாக வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதே சமுதாயம் முன்னேறுவதற்கான பாதையாகும்.

## முடிவுரை

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் வீரமாக இருப்பதையே விரும்புகிறார்கள். அனைவருக்கும் அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும். அதுவே ஏற்றதாழ்வுகளை போக்குவதற்கான வழி பெற்றோர்கள் குழந்தைகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதையும், கூடி வாழும் குணத்தை மக்கள் கடைப்பிடிப்பதே சமுதாயம் மேன்மை அடைவதற்கான வழி என்பதை உணரமுடிகிறது.

## தொகுப்புரை

1. இயற்கை என்றால் என்ன என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
2. ஒவ்வொரு பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் வீரம் உடையவர்களாவே வாழவேண்டும் என விரும்புகிறார்கள் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
3. மக்கள் தங்களுக்கிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாகுபாடுகள் பார்த்தல் கூடாது. மக்கள் பிற உயிர்களுக்கும் உணவினை கொடுத்து, பிறகுதான் உண்டு, பொதுநலமுடையவர்களாக வாழ வேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.
4. தாய்மை என்னும் உணர்வு மனிதர்களிடம் மட்டுமில்லாது பிறஉயிர்களிடத்திலும் காணப்படுகிறது. ஒவ்வொரு பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை பிறர் சான்றோர் என சொல்வதையே விரும்புகிறார்கள். தாய்மார்கள் தன் குழந்தையை மட்டுமில்லது பிற குழந்தையையும் தன் குழந்தையாக கருத வேண்டும் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
5. மக்கள் கூடிவாழும் குணத்தை கடைபிடிக்க வேண்டும். அதுவே சமுதாயம் மேன்மையடைவதற்கான வழி என்பது உணர்த்தப்பட்டுள்ளது.
6. மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதே சமுதாயம் முன்னேறுவதற்கான வழி என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

## துணைநூற் பட்டியல்

1. பூபாளத்திற்கொரு புல்லாங்குழல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட, அம்பத்தூர், சென்னை-600 098.ஏழாம் பதிப்பு-2016,
2. அழகோ அழகு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098. ஏழாம் பதிப்பு-2019,
3. ஆசியஜோதி, விஜயா பதிப்பகம், 20, ராஜா வீதி, கோயமுத்தூர்-641 001.
4. பாரதிதாசன் கவிதைகள், கௌராபுத்தக மையம், 9, ஜெயின்ட் ஜார்ஜ் வணிக வளாகம், ராக்கின் சாலை, திருச்சி-1.